# நவம்பர் – 26 – பொதுக்கால 34ம் ஞாயிறு

## கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா

## ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை. திபா. 23:1

## முதல் வாசகம் : ஏசேக்கியல் 14:11– 12,15-17

அப்போது, இஸ்ரயேல் வீட்டார் என்னை விட்டு வழிதவறிப் போகாமலும், தங்கள் எண்ணற்ற குற்றங்களால் மீண்டும் தங்களைக் கறைப்படுத்திக்கொள்ளாமலும் இருப்பர். அப்போது அவர்கள் என் மக்களாய் இருப்பர். நானும் அவர்கள் கடவுளாய் இருப்பேன், என்கிறார் தலைவராகிய ஆண்டவர். அப்போது ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. நான் காட்டு விலங்களை நாடு முழுவதும் அலைந்து திரியவிட, அவை அதனைப் பாழாக்கி வெறுமையாக்கும். அவற்றின் காரணமாய் யாரும் அங்கே நடமாட முடியாதிருக்கும். அப்போது, இம்மூவரும் அங்கே இருந்தால்-என்மேல் ஆணை-அவர்கள் மட்டுமே காப்பாற்றப்படுவர். தங்கள் புதல்வர்களையோ, புதல்வியரையோ காப்பாற்ற அவர்களால் முடியாமற் போகும் நாடும் பாழாய்ப் போகும், என்கிறார் தலைவராகிய ஆண்டவர். அல்லது, நான் அந்த நாட்டின்மீது வாளை வரச்செய்து, ”வாள் நாட்டை ஊடுருவட்டும்” என ஆணையிட்டு மனிதரையும், கால்நடைகளையும் வெட்டி வீழ்த்துவேன்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

## இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 15 : 20 - 26

சகோதர சகோதரிகளே ஆனால் இப்போதோ, இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல ஒரு மனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழு கின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போலக் கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர். ஒவ்வொருவரும் அவரவர் முறை வரும்போது உயிர்பெறுவர். கிறிஸ்துவே முதலில் உயிர்பெற்றார். அடுத்து, கிறிஸ்துவின் வருகையின்போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர். அதன்பின்னர் முடிவு வரும். அப்போது கிறிஸ்து ஆட்சியாளர், அதிகாரம் செலுத்துவோர், வலிமையுடையோர் ஆகிய அனைவரையும் அழித்துவிட்டு, தந்தையாகிய கடவுளிடம் ஆட்சியை ஒப்படைப்பார். எல்லாப் பகைவரையும் அடிபணிய வைக்கும்வரை அவர் ஆட்சி செய்தாக வேண்டும். சாவே கடைசிப் பகைவன், அதுவும் அழிக்கப்படும்.

## நற்செய்தி : மத்தேயு 25 : 31 - 46

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது: ”வானதூதர் அனைவரும் புடை சூழ மானிட மகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப்பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவதுபோல் அம்மக்களை அவர் வெவ் வேறாகப் பிரித்து நிறுத்துவார். பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, ”என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள் உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள் தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள் அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள் நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள் சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்” என்பார். அதற்கு நேர்மையாளர்கள் ”ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவ ராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ள வராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத் தேடி வந்தோம்?” என்று கேட்பார்கள். அதற்கு அரசர், ”மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்” எனப் பதிலளிப்பார். பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, ”சபிக்கப் பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை” என்பார். அதற்கு அவர்கள், ”ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்?” எனக் கேட்பார்கள். அப்பொழுது அவர், ”மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” எனப் பதிலளிப்பார். இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நிலை வாழ்வு பெறவும் செல்வார்கள்“ என்றார்.

**தியானம்:** கிறிஸ்து அரசர் பெருவிழா, இயேசுக்கிறிஸ்து அனைத்துலகின் அரசர்களுக்கெல்லாம் அரசர் என்ற மையப்பொருளில், பொதுக்காலத்தின் இறுதி ஞாயிறன்று சிறப்பிக்கப்படுகிறது, கிறிஸ்து அரசர் பெருவிழாவுக்கான நற்செய்தி, ‘கிறிஸ்து அரசர்’ என்ற மையப்பொருளையும், அதன் அர்த்தத்தையும் அறிந்துகொள்ள உதவுவதால் (மத்தேயு 25: 31-46), கிறிஸ்துவை அரசர் என்று அழைப்பதன் உட்பொருளை, நற்செய்தியின் வெளிச்சத்தில் ஆராய்வோம். கீழ்த்திசை ஞானிகளே இயேசுவை அரசர் என்று கூறிய முதல் மனிதர்கள் ஆவார்கள். ஏரோதுவின் அரண்மனையில், “யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே?. அவரை வணங்க வந்திருக்கிறோம்” என்றார்கள். (மத்தேயு 2:2) அன்று கள்ளம் கபடின்றி அவர்கள் கேட்ட கேள்வி, பல நூறு கள்ளம் கபடற்ற குழந்தைகளின் உயிர்களைப் பலி வாங்கியது. இயேசுவின் அரும் அடையாளங்களைக் கண்ட மக்கள், “உலகிற்கு வரவிருந்த இறைவாக்கினர் உண்மையில் இவரே“ என்றார்கள். அவர்கள் வந்து தம்மைப் பிடித்துக் கொண்டுபோய் அரசராக்கப் போகிறார்கள் என்பதை உணர்ந்து இயேசு மீண்டும் தனியாய் மலைக்குச் சென்றார். (யோவான் 6 :14-15) என்பது இயேசுவை அரசராக்க முயன்ற இரண்டாவது நிகழ்வாக நற்செய்தி பதிவு செய்துள்ளது. எருசலேம் வீதிகளில் குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, “ஓசன்னா! ஆண்டவரின் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! இஸ்ரயேலின் அரசர் போற்றப்பெறுக!” (யோவான் 12: 12-13) என்று இயேசுவை அரசர் என்ற பதிவினை நற்செய்தி மூன்றாவது தடவையாகப் பதிவு செய்துள்ளது. இயேசுவை அரசர் என்று பிறர் சொல்லக்கேட்டுப் பயம்கொண்ட பிலாத்து, இயேசுவிடமே, “நீர் அரசரா?” என்று கேட்டார். அந்தக் கேள்வியின் உண்மையான பதிலைக் கண்டுபிடிக்கவும் பிலாத்து பயந்தார் (யோவான் 18:37) என இயேசுவை அரசராக்கிய நான்காவது நிகழ்வாக நற்செய்தி பதிவு செய்கிறது. ‘அரசர்’ என்று இயேசு அழைக்கப்பட்ட ஐந்தாவது நிகழ்வு, கல்வாரியில் நடந்தது. இயேசுவை அரசராகப் பார்க்கவிரும்பாத உரோமைய வீரர்களின் ஏளனக் குரலும், இயேசுவை அரசர் என்று ஏற்றுக்கொண்ட குற்றவாளியின் ஏக்கக் குரலும் கல்வாரியில் ஒலித்து, இயேசுவின் அரசத் தன்மையை வெளிப்படுத்த, “நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்”. (லூக்கா 23: 42) என்று, வலது புறத்தில் அறையப்பட்ட குற்றவாளியிடமிருந்து விண்ணப்பம் ஒலித்தாக நற்செய்தி பதிவு செய்துள்ளது. மனிதன் என்று கணிக்கமுடியாத அளவு காயப்பட்டு, உழுதநிலம்போல சிலுவையில் தொங்கிய பரிதாப உருவத்தில், ஓர் அரசரைக் காண முடியுமாயின் அந்தக் குற்றவாளி இயேசுவிடம் கண்ட அரசத்தன்மைதான் என்ன? ஆழமாகச் சிந்தித்து முன்மதியோடு நடப்போம். இயேசு அரசர் மாட்சிமையோடு வரும் நாள் மிக அருகில் நெருங்கி வந்துவிட்டது.